## ‘இந்து மதம்’ என்றால் பா.ஜ.க. தானா?

# பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் தி.மு.க. அரசு!

## ‘நக்கீரன்’ இணையதளத்திற்கு முனைவர் இராம சுப்பிரமணியம் பேட்டி!

சென்னை,ஆக.17 –

**நக்கீரன் இணையதளத்திற்கு கல்வியாளர் முனைவர் இராம சுப்பிரமணியம் நேர்காணல் அளித்துள்ளார்.**

**அதில் அவர் கூறியிருப்பதாவது:**



**கேள்வி :** *அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் பழனியில் நடைபெறவுள்ளது. இதற்கு பா.ஜ.க. மாநிலத் தலைவர் “விரைவில் முதலமைச்சர் ஜெய் ஸ்ரீராம் சொல்லிவிடுவார்” என விமர்சனம் செய்கிறார். இதேபோல் இராம. சீனிவாசன் ஆகியோரும் விமர்சனம் வைக்கிறார்களே?*

**இராம சுப்பிரமணியம்:** முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் இந்த மாநாடு சிறப்பாக நடக்க இருக்கிறது. இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பங்களிப்பு அபரிமிதமானது. மாநாடு தொடர்பாக பல கூட்டங்களை நடத்தியுள்ளார் அமைச்சர் சேகர்பாபு. அகில உலக அளவில் நடக்கக் கூடிய மாநாடு என்பதால் தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா முழுவதிலும் இருந்தும், உலக அளவில் இருந்தும் முருகன்மேல் பக்தி கொண்டவர்கள் வர உள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வரும் முக்கிய நபர்கள் இந்த மாநாட்டில் பேசப் போகிறார்கள். நிறைய ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்போகிறார்கள். அந்தப் பொறுப்பை மு.பெ. சத்தியவேல் முருகனார் எடுத்துக்கொண்டுள்ளார்.

ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் விருதுகள் அளிக்க உள்ளனர். கருத்தரங்கம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் நடக்க உள்ளது. தேசமங்கையர்க்கரசி, சுகிசிவம் உள்ளிட்டவர்கள் இதற்கான பணிகளை செய்துகொண்டிருக்கின்றனர். அறுபடை வீடுகளின் அரங்குகள் அங்கு அமைக்கப்பட உள்ளது. இந்த மாநாடு சிறப்பாக நடைபெற சைவ சமயத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் பங்கும் இருக்கிறது. மிகச்சிறந்த கூட்டு முயற்சியால் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது.

**கேள்வி:** *உங்க அனுபவத்தில் இது போன்ற மாநாடு நடைபெற்றுள்ளதா?*

**இராம சுப்பிரமணியம்:** இதுவரை நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் அரசு சார்பில் நடைபெறும் பெரிய மாநாடு இதுதான்.

**கேள்வி :** *ஓட்டுக்காகத்தான் இந்த மாநாட்டை நடத்துகிறார்கள் என்கிறார்களே?*

**இராம சுப்பிரமணியம் :** ஓட்டுக்காகவே ராமரின் மகுடத்தை தூக்கிக்கொண்டு பிரதமர் மோடி நடந்தார். அதனை மீடியாக்கள் காண்பித்தன. அயோத்தியில் ஏராளமான வி.ஐ.பி.க்களை வரவைத்து, அவர்களுக்கு தங்கும் இடம் முதல்கொண்டு பல ஏற்பாடுகளை செய்தார்கள். அதற்கு எவ்வளவு விளம்பரங்கள்ச் செய்தார்கள். உத்திரப்பிரதேசம் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகளுக்கு ஏராளமாக செலவு செய்து விளம்பரங்கள் செய்தார்கள். உண்மையான பக்தர்களுக்காக இந்த முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தக் கூடாதா?

வெகுநாட்களாக முருக பெருமானுக்கு இப்படி ஒரு விழா எடுக்கணும் என்பது பக்தர்களின் ஆசை. அதற்காக அரசு தேர்ந்தெடுத்த இடம் சரியானது. முதல்வரும், அமைச்சரும் தேர்வு செய்த இடம் பழனி. இது அறுபடைவீடுகளில் முக்கியமானது. மாநாடுக்கு வரும் அனைவருக்கும் போக்குவரத்து வசதிகள், குடிநீர், சாப்பாடு, தகுந்த கழிப்பறைகள், பிரமாண்டமான பந்தல் என பல்வேறு பணிகளை இந்து அறநிலையத்துறை அதிகாரிகள் தீவிரமாக செய்து வருகிறார்கள்.

**கேள்வி:** *திமுகவுக்கு முருகன் மீது திடீர் அக்கறை வந்திருக்கிறது என விமர்சனம் வருகிறதே?*

**இராம சுப்பிரமணியம்:** இந்து மதம் என்றால் பா.ஜ.க.தானா?. நீங்கதான் கடவுள்களை சப்ளை பண்றீங்களா? இந்து மதத்திற்கு நீங்கதான் அத்தாரிட்டியா? அவர்கள் பேசுவது அபத்தமானது. திமிர்த்தனம். முதலமைச்சர் ‘ஜெய் ஸ்ரீராம்’ சொல்லிவிடுவார் என்கிறார்கள். தேர்தல் முடிவுக்குப் பிறகு ஜெய் ஸ்ரீராம் என பா.ஜ.க.வினரே சொல்வதை நிறுத்தி விட்டார்கள். பூரி ஜெகநாதரை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ‘வேல் யாத்திரை’ என்ற பெயரில் தமிழக பா.ஜ.க. புருடா விட்டுக்கொண்டு அலைந்தார்கள். அதில் முருக பக்தர்களே இல்லை.

திமுக அரசாங்கம் ஆன்மீகத்திற்கு எதிரானது கிடையாது. அயோத்திக்குப் போக ஆசைப்பட்டவர்கள் அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டனர். காசிக்கு போக விரும்பியவர்களை அனுப்பி வைக்கப்பட்டனர். அறுபடைவீடுகளுக்கு போக விரும்பிய 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த அரசு அதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தது. இப்போது ஆடி மாதம் அம்பாள் கோயிலுக்கு போக விரும்பி யார்களுக்கு ஏற்பாடு செய்கிறது?. இதேபோல் எந்த அரசாங்கம் செய்கிறது. பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து தி.மு.க. அரசு செய்கிறது. வேறு எந்த அரசும் செய்ய முடியாது.

**– நன்றி‘**

**நக்கீரன் இணையதளம்.**



தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருக்கோவிலூர் பணிமனை தொழில்நுட்ப பிரிவு பொதுக்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள சென்னாகுணம் முரளி தொ.மு.ச. பொதுச் செயலாளர் வி.சேகர் அவர்கள் தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்று தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். மாவட்ட துணைச் செயலாளர் இரா. கற்பகம், தலைவர் ஞானசேகரன், அமைப்புச் செயலாளர் வேலு, மத்திய சங்க நிர்வாகிகள் திருக்கோவிலூர் ரகு, நாகராஜன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## விழுப்புரத்தில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*விழுப்புரம், ஆக. 17 -*

*கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் ஒன்றியத்திற்குட்பட்ட, செங்காடு, இளங்காடு, நரையூர், சாலையம்பாளையம், கல்லப்பட்டு, மழவராயனூர், சகாதேவன் பேட்டை ஆகிய ஊராட்சிகளின் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமை துவக்கி வைத்து, மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.*

*உடன் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார திட்டக் குழு அலுவலர், ஒன்றிய கழக செயலாளர் பி.தெய்வசிகாமணி, ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் தமிழ்ச்செல்வி இரா.கேசவன், துணை பெருந்தலைவர் உதயகுமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.தவமணி, அவைத் தலைவர் வழக்கறிஞர் இராம்.கண்ணப்பன்,*

*ஒன்றிய துணை செயலாளர்கள் நரையூர் ஜெயபால், ஸ்ரீதர், ஜெயந்தி ராஜகணேஷ் மற்றும் சிவசங்கர், குணசேகர், வசந்தி சந்திரசேகரன், இருசன், ஜெயசுந்தரி குணசேகரன், குப்பு சாமி, என்.ஆர்.மணி, இ.மணி, காம ராஜ், சிவராமன், தேவன், எடிட் ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

## சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 17 –

சிவகங்கை மாவட்டக் கழக துணைச் செயலாளரும் – காஞ்சிரங்கால் ஊராட்சி மன்றத் தலைவருமான கே.எஸ்.எம். மணிமுத்து நேற்று முன்தினம் (15.8.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவர் – முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க ஆகஸ்டு 15 சுதந்திர தினத்தில் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் ஒன்றியம், மரகதபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணை செயலாளருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்களும் மாவட்ட ஆட்சியர் சி.பழனி அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் ஸ்ருதன்ஜெய் நாராயணன், க.மும்மூர்த்தி, இ.சச்சிதானந்தம், தேவி ரமேஷ், இரா.கேசவன், வழக்கறிஞர் சிவக்குமார், அலமேலு சத்தியா, காமராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், ஞானவேல், ஜெயா பன்னீர் செல்வம், ஏழுமலை, கபாலி, பில்லூர் பழனி, பிடாகம் ராஜா, நன்னாடு முத்துசாமி, சரவணன், குமார், சக்தி பாபு, பிரபு, ராஜாமணி, திவாகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## 4 வழிச் சாலையாக தரம் உயர்த்தி

# திண்டிவனம் - மரக்காணம் தார்ச் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வையிட்டார்!

*திண்டிவனம், ஆக. 17 -*

*தமிழ்நாடு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும் திண்டிவனம் மரக்காணம் இருவழி சாலையை நான்கு வழி சாலையாக தரம் உயர்த்தி தார் சாலை அமைக்கும் பணியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு மேற்கொண்டார்.*

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மரக்காணம் செல்லும் இரு வழி சாலையை நான்கு வழி சாலையாக தயாராக உயர்த்தி அகலப்படுத்த வேண்டும் எனதமிழ்நாடு முதலமைச்சருக்கு பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.*

*பொதுமக்களின் இக்கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டிவனத்தில் இருந்து மரக்காணம் செல்லும் இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தி அகலப்படுத்தி சாலை அமைக்கும் பணி பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வருகிறது.*

*திண்டிவனத்தில் இருந்து ஆலங்குப்பம் வரை 116 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆலங்குப்பத்திலிருந்து மரக்காணம் வரை 122 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.*

*இந்நிலையில் குருவம்மா பேட்டை கட்டளை கூட்டு சாலையில் இரண்டாம் அடுக்கு தார் சாலை போடும் பணியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடிக்க வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.*

*ஆய்வின்போது நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் கவிதா,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி, உதவி பொறியாளர் ராமு,மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அன்சாரி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்

### ஆகஸ்ட் 17 (2010)



**நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.**

**35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## கரூரில் இன்று

# இளைஞர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

## மாவட்ட தி.மு.க. சார்பில் அறிக்கை!

கரூர், ஆக. 17 –

என் உயிரினும் மேலான.. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி கரூர் மாவட்ட கழக ஒருங்கிணைப்பில் இளைஞர் அணி சார்பில் இன்று 17ஆம் தேதி கரூரில் நடைபெறுகிறது என மாவட்ட தி.மு.க. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை வருமாறு :

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க,

என் உயிரினும் மேலான…/. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் திமுக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கரூர் மாவட்ட செயலாளர் வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, மாவட்ட கழக ஒருங்கிணைப்பில் இளைஞர் அணி சார்பில் நடைபெறுகிறது. 17ஆம் தேதி (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு கரூர் திண்ணப்பா தியேட்டர் அருகில் ஆர்த்தி அழகம்மை மஹாலில் நடைபெறுகிறது. என்றென்றும் பெரியார் ஏன்?. அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை, சுயமரியாதைக்காரர் கலைஞர், கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி, இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதி காவலர் கலைஞர், தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க., பேசி வென்ற இயக்கம், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் ஆகிய தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் நடைபெறுகிறது.

மாநில அளவில் முதல் பரிசு ரூபாய் ஒரு லட்சம், இரண்டாம் பரிசு ரூ.75 ஆயிரம், மூன்றாம் பரிசு 50 ஆயிரம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 25000, இரண்டாவது பரிசு, ரூ.15000, 3வது பரிசு ரூ10000 நிகழ்ச்சியில் வழங்கப்படும். மேலிட பார்வையாளராக ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணை செயலாளருமான கே.இ.பிரகாஷ், நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், தாயகம் கவி எம்.எல்.ஏ. குத்தாலம் அன்பழகன், பிரகதீஸ்வரன், ஆண்டாள் பிரியதர்ஷினி, செந்தில்வேல், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் திராவிட இயக்க கொள்கைகளை ஏற்றுக் கொள்பவர்களாக இருப்பது அவசியம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் நினைவு பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். முதல் கட்ட தேர்வில் கலந்து கொண்டவர்களில் சிறப்பாக பேசியவர்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மண்டலம் தோறும் நிகழ்ச்சி நடைபெறும்.

இரண்டாம் கட்ட நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை கொண்டு நடைபெறும் இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் மிகச் சிறப்பாக பேசியவர்களில் முதல் மூன்று நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். இந்த போட்டியில் சிறப்பாக பேசியவர்களில் 100 பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து சமூகநீதி, சுயமரி யாதை, மொழியுரிமை, மாநில சுயாட்சி ஆகிய திராவிட இயக்கத்தின் கருத்துக்களை பரப்பி தமிழர்களின் வாழ்வுக்கு வளம் சேர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்கச் செய்வோம். பங்கேற்பாளர்கள் காலை எட்டு மணிக்கு அரங்கத்தில் இருக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கமலநாதன்

### ஆகஸ்ட் 17 (1997)



**தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**